

தருமபுரி மாவட்டத்தில் முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி தருமபுரி மாவட்ட நிர்வாகம்,தகடூர் புத்தக பேரவை மற்றும் பாரதி புத்தகாலயம் ஆகியவை இணைந்து நடத்தும் 6ஆம் ஆண்டு புத்தகத் திருவிழாவினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி. சாந்தி,நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார்,கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி. பழனியப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார்,தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்ரி,மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் நேற்று முன்தினம் (05.10.2024) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆய்வு மேற்கொண்டார். உடன் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனிஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மகாஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### பொதுமக்களின் புகார்கள் குறித்து நேரடி ஆய்வு !

# தடையில்லா மின்சாரம் கிடைத்திட நடவடிக்கை!

### ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வலியுறுத்தல் !

சென்னை, அக். 7 -

நேற்று முன்தினம் (05.10.2024) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் 24X7 இயங்கி வரும் மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி மின்னகத்தில் பதிவான மின்சாரம் தொடர்பான பொது மக்களின் புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நேரடி ஆய்வு மேற்கொண்டார்.

மின்னகத்தில், பொதுமக்களிடமிருந்து புகார்களை பெறுவதற்காக, 3 முறைப் பணிகளில், ஒவ்வொரு முறைப்பணிக்கும் 2 மேற்பார்வையாளர்கள் உட்பட 65 பணியாளர்களை கொண்டும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கீழ் இயங்கி வரும் 44 மின் பகிர்மான வட்டங்களிலும் நாள் ஒன்றிற்கு நான்கு பேர் வீதம் 176 நபர்களை கொண்டும் 24x7 மணி நேரமும் இயங்கி வருகிறது.

மின்னகம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை பெறப்பட்டுள்ள 28,69,876 புகார்களில் 28,64,215 புகார்கள் (99.80%) மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்னகத்தில், மின் தடை குறித்து பெறப்படும் ஒவ்வொரு புகாரும் உடனடியாக சரி செய்யப்பட்டு, புகார் குறித்த உண்மை தன்மை சம்பந்தப்பட்ட புகார்தாரரிடம் அலைபேசி மூலம் உறுதி செய்யப்பட்ட பின்னரே புகார்கள் முடிக்கப்படுகின்றன.

இந்த ஆய்வின் போது, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாநிலத்தின் மின்சாரத் தேவை மற்றும் மின் விநியோகத்தில் எவ்வித இடைவெளியும் இல்லை. மாநிலம் முழுவதும் தடையில்லா, சீரான மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் எடுத்துள்ளது. மின் விநியோகம் சார்ந்த குறைபாடுகளை சரி செய்ய 24 மணி நேரமும் செயல்படும் தொலைபேசி சேவை மின்னகத்தை 9498794987ல் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.நந்தகுமார், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர்கள், மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நாகை வருகை தந்த உயர்கல்வி துறைஅமைச்சர் கோவி.செழியனுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில்!

நாகை, அக். 7 -

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் அரசு நடத்தி வரும் கழகத்தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையில் உயர் கல்விதுறை அமைச்சராக பொறுப்பு ஏற்றுள்ள உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் நாகை மாவட்டத்திற்கு வருகை தந்தார். நாகை மாவட்டத்திற்கு வருகை தந்த அமைச்சர் கோவி.செழியனுக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்சசிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

வரவேற்பு நிகழ்ச்சிகளில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், இல.மேகநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பனகம், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செலயாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ. தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், சிக்கல் என்.ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா. மலர்வண்ணன் நகரக் கழகச் செயலாளர்கள் இரா. மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக் குழு உறுப்பினர்கள் எம்.பாண்டியன், பன்னீர்செல்வம், உமா செந்தாமரை, கோசி. குமார், எஸ்.பி.டி.சார்லஸ், பேரூர் கழகச் செயலாளர்கள் க.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமது சுல்தான், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, இரா.முருகையன், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, அ.பாரிபாலன், இளம்.சுந்தர், சுரேந்தர், கமல், ப.உதயக்குமார், தமயேந்தி, புவனேஷ்வரி, குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 18 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.96,011 வீதம் ரூ.17.28 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வசந்த ராம்குமார், மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் வெ.ராதாகிருஷ்ணன், பகுதி அவைத்தலைவர் தம்பி ப.குமாரசாமி, வட்டக் கழக செயலாளர்கள் மு.நந்தகோபால், பி.மகேந்திரன், மாணவர் அணி செ.திலகராஜ், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் திராவிட பாலு உள்பட பலர் உள்ளனர்.

# மயிலாடுதுறை வருகை தந்த உயர்கல்வி துறைஅமைச்சர் கோவி.செழியனுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில்!

மயிலாடுதுறை, அக். 7 -

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் அரசு நடத்தி வரும் கழகத்தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையில் உயர்கல்விதுறை அமைச்சராக பொறுப்பு ஏற்றுள்ள உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்தார். மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த அமைச்சர் கோவி. செழியனுக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. மயிலாடுதுறை பேருந்து நிலையத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அமைச்சர் கோவி. செழியன் மயிலாடுதுறை ராணி மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, முத்து.மகேந்திரன், இராம.இளங்கோவன், மாவட்டக் கழக அமைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர். ராஜா, செல்லசேது.ரவிக்குமார், என்.இளையபொருமாள், மலர்விழிதிருமாவளவன், ஞான.இமையநாதன், ப.முருகமணி, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமுர்த.விஜயகுமார், பஞ்சுகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன், முத்துராஜா, எம். அன்புச்செழியன், பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ.காந்தி, ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், சுபா, எஸ்.வெற்றிவேல், சங்கரநாராயணன், பி.கென்னடி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் எம்.மகேந்திரன், ஜெயபிரகாஷ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, குத்தாலம் க.அறிவுசெல்வன், செல்வராஜ், வி.எஸ்.என்.செந்தில், இரா.முருகப்பா, வி. சௌமியன், இரா.மனோகரன், எஸ்.ராஜ்குமார், ஆர்.எஸ்.ஸ்ரீதர், காளி. தேசப்பன், கே.விக்னேஷ், வைத்தியநாதன், இரா.தன்ராஜ், காழி.கலைவாணன், பெரு.வீரமணி, எம்.எஸ். முத்துகுபேரன், வெடி எஸ்.பாலமுருகன், தீபாசத்தியேந்திரன், எஸ்.எம்.சம்சுதீன், இரா.முருகன், சாந்தி, கே.விக்னேஷ், வி. எஸ்.பிரபாகர், மாற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் தனியார் துறை வேலைவாய்ப்பில் தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் உரிய பணி நியமன ஆணைகளை மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பராஜ், சி.என். அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் நல்லதம்பி, அ.செ.வில்வநாதன் ஆகியோர் வழங்கினர். இதில் கழக நிர்வாகிகள்,அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ரூ 5.57கோடி மதிப்பீட்டில் செஞ்சி ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றி பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், துணைச் சேர்மன் ஜெயபாலன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீத்தாலட்சுமி, முல்லை ஆகியோர் உள்ளனர்.



நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் காமேஷ்வரத்தில் 4 வீடுகள் எரிந்து சேதம் ஏற்பட்டது. இதையடுத்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நாகை மாவட்டக கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் ஆறுதல் கூறி நிதி உதவியளித்தார். உடன் கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ. தாமஸ்ஆல்வாஎடிசன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், ஒன்றிய அவைத்தலைவர் சுப்பரமணியன் ஒன்றிய குழு துணைத்தலைவர் சௌரிராஜ் மற்றும் கிளை நிர்வாகிகள் உள்ளனர்.

## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நிர்வாகப் பணியாளர் - மேற்பார்வையாளர் முன்னேற்ற சங்கம் காஞ்சிபுரம் மண்டல மத்திய சங்க நிர்வாகிகள்!

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நிர்வாகப் பணியாளர் - மேற்பார்வையாளர் முன்னேற்ற சங்கம் காஞ்சிபுரம் மண்டலத்தின் (பதிவு எண். 2166/MDS, பேரவை இணைப்பு எண். 708) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 24.09.2024 அன்று பேரவைச் செயலாளர் ஜெ.விஜயகுமார் அவர்களை தேர்தல் ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

**மத்திய சங்க நிர்வாகிகள்**

தலைவர் - - K.சுப்பிரமணி (17131)
துணைத்தலைவர் - S. கலைச்செல்வன் (15310)
பொதுச்செயலாளர் - T.K. இராமசாமி (15295)
துணைப்பொதுச்செயலாளர் - V. தேவதானம் (19027)
பொருளாளர் - C. குமரவேல் (17139)

இடம் : கலைஞரகம்
நாள் : 01.10.2024

**(மு.சண்முகம், எம்.பி.)**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை



திருப்பூர் மாவட்டம், காங்கயம் தாலுகா, குட்டப்பாளையம் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் மற்றும் வனத்துக்குள் திருப்பூர் இணைந்து நடத்தும் நொய்யல் வனம் நொய்யல் நதிக்கரை பகுதிகளில், தனியார் பங்களிப்பில், தனியார் நிலத்தில் பெரும் பரப்பளவில் 12,000 மரக்கன்றுகள் நட்டு வளர்த்து சுற்றுச்சூழல் காக்கும் நொய்யல் வனம் திட்டத்தை திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தமைமையில் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய தலைவர் சிவசேனாபதி சாமிநாதன், அயலகத்தமிழர் நல வாரிய தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி முன்னிலையில் தமிழ்நாடு அரசு மாநில திட்டக்குழு துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், திருப்பூர் மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர் ந.தினேஷ்குமார் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டு துவக்கி வைத்தனர். இதில் ”வெற்றி நிர்வாக அறங்காவலர் டி.ஆர்.சிவராம், சென்னை, ரோஜா முத்தையா ஆய்வு நூலக இயக்குனர் சுந்தர் கணேசன், திரைப்பட இயக்குனர் செல்வி. ஹமிதா சமீம், தூத்துக்குடி தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பொது மேலாளர் பி.ஆர்.அசோக்குமார், குட்டப்பாளையம் சாமிநாதன் கல்வி மற்றும் அறச்செயல் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் அரவிந் நல்லதம்பி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.